# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2011 - 2012

# வளர் தமிழ் 7

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

**1) வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. சிலப்பதிகாரம் என்பது ஒரு

அ) காப்பிய நூல் ஆ) இலக்கண நூல் இ) சிறுகதை நூல் ஈ) வடமொழி நூல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. வன்னிப்பகுதி எத்தனை பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது?

அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) பத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. கருத்து முற்றுப்பெறாது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வருவது

அ) சொல்லியம் ஆ) குறைவினை இ) சொற்பிரிப்பு ஈ) சொற்றொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பாடினான் என்ற வினைமுற்றின் காலம்

அ) எதிர்காலம் ஆ) வருங்காலம் இ) நிகழ்காலம் ஈ) இறந்தகாலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. செல்லிடம் என்பதைப் பிரித்தால்

அ) செல்லு + இடம் ஆ) சொல் + இடம் இ) செல் + இடம் ஈ) சென்று + இடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. இரக்கப் போனாலும் ________________ ப் போ.

அ) சிரிக்க ஆ) சிரக்க இ) சிறிக்க ஈ) சிறக்க

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. ஒருமை, பன்மை என்பவை இதற்குள் அடங்கும்

அ) இடம் ஆ) காலம் இ) திணை ஈ) எண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. சாமரம் என்பதன் கருத்து

அ) மரம் ஆ) விசிறி இ) வாள் ஈ) சங்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலுள்ள இசைத் தூண்களின் எண்ணிக்கை

அ) மூன்று ஆ) ஆறு இ) ஐந்து ஈ) பத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஈமத்தாழிகள் கண்டு எடுக்கப்பட்ட இடங்களில் ஒன்று.

அ) காலி அ) ஆ) மட்டக்களப்பு இ) முல்லைத்தீவு ஈ) பொம்பரிப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. போர்த்துக்கேயருக்குத் திறை செலுத்த மறுத்த மன்னன்

அ) கயிலைவன்னியன் ஆ) இராசசிங்கன் இ) பண்டாரவன்னியன் ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. வேய்ங்குழல் - என்பதை பிரித்து எழுதினால்

அ) வேர் + குழல் ஆ) வேல் + குழல் இ) வேய் + குழல் ஈ) வேள் + குழல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பின்வரும் எழுத்துக்களில் வல்லினம்

அ) ச் ஆ) ய் இ) ர ஈ) ங்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. துளைக்கருவிகளில் ஒன்று

அ) மேளம் ஆ) முழவு இ) புல்லாங்குழல் ஈ) வீணை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி

அ) விறுவிறு ஆ) அல்லும் பகலும் இ) மெல்ல மெல்ல ஈ) பென்னம்பெரிய

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. தமிழர் கலைகள்

அ) ) அறுபது ஆ) அறுபத்தெட்டு இ) அறுபத்துநான்கு ஈ) அறுபத்தைந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. மருதுபாண்டியனின் மாபெரும் தீரம் என்ற நிகழ்வு

அ) கற்பனை ஆ) கட்டுக்கதை இ) உண்மை ஈ) பொய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. ஒருவன் தன்னைத் தான் காத்துக் கொள்வதற்கு எதைக் காத்துக் கொள்ள வேண்டும்?

அ) இன்பத்தை ஆ) துன்பத்தை இ) பணத்தை ஈ) சினத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. நயம் என்ற சொல்லின் பொருள்

அ) கொடை ஆ) வழிமுறை இ) துன்பம் ஈ) அழகு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. வினைமுற்றுக்கு எடுத்துக்காட்டு

அ) பிள்ளை ஆ) விழுந்து இ) பாடினான் ஈ) ஆடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. 'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்...... என்ற பாடல் இடம்பெறும் நூல்

அ) மூதுரை ஆ) நல்வழி இ) கொன்றை வேந்தன் ஈ) நாலடியார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. காந்தள் எனும் பூவின் இன்றைய பெயர்

அ) ஆம்பல்பூ ஆ) செவ்வந்திப்பூ இ) கனகாம்பரப்பூ ஈ) கார்த்திகைப்பூ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. பின்வருவனவற்றுள் பெயரெச்சமாக அமைவது

அ) அழுதான் ஆ) ஆடு இ) எழுது ஈ) பாடிய

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. கட்டப்பொம்மனைக் காட்டிக் கொடுத்தவன்

அ) கதிர்காமநாயகம் ஆ) வன்னியத்தேவன் இ) காக்கை வன்னியன் ஈ) எட்டப்பன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பின்வருவனவற்றுள் வினையெச்சமாக வருவது

அ) ஓடு ஆ) நடந்த இ) பாய்ந்து ஈ) கட்டினாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தும்பை மலர் போன்று தொங்கவிட்ட நீர் வீழ்ச்சித் தாடியை உடையவர்
அ) நக்கீரனார் ஆ) மோசிகீரனார் இ) அதியர்மான் ஈ) கபிலர்
அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. முல்லை நிலம் என்பது
அ) வயலும் வயல் சார்ந்த இடமும் ஆ) காடும் காடு சார்ந்த இடமும்
இ) மணலும் மணல் சார்ந்த இடமும் ஈ) கடலும் கடல் சார்ந்த இடமும்
அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய ஆண்டு
அ) 1983 ஆ) 1981 இ) 1972 ஈ) 1976
அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இலக்கிய இன்பம் என்னும் பாடத்தில் களத்து மேட்டிலே பூத்திருந்த பூ
அ) மல்லிகைப்பூ ஆ) முல்லைப்பூ இ) அல்லிப்பூ ஈ) சூரியகாந்திப்பூ
அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பின்வருவனவற்றுள் அடுக்குத் தொடர்
அ) காலைமாலை ஆ) கூட்டங்கூட்டம் இ) சலசல ஈ) தன்னந்தனியே
அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பின்வரும் பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்வி. அது ஈடு இணையில்லாச் செல்வம். அதனால் தான் வள்ளுவர் "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்றார். கெடுதல் அல்லது அழிதல் இல்லாத செல்வம் கல்வி என்பதே இதன் பொருள். கல்வி என்றும் நிலைத்து நிற்கக் கூடியது. பிற செல்வங்கள் அழிந்து விடக் கூடியன. ஒருவரிடமுள்ள கல்வி வெள்ளத்தினால் அழியாது; நெருப்பினால் வேகாது; கள்வர்களினால் கொள்ளையிடவும் முடியாது. கல்வி கொடுக்கக் கொடுக்க கூடுமே தவிர குறையாது. கல்வி சிறப்புடையது. மன்னனுக்குத் தனது தேசத்தில் தான் சிறப்பு. ஆனால் கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. எனவே மன்னனைவிடக் கற்றவர் சிறப்புடையவர். ஆகவே எல்லாச் செல்வங்களையும் விட கல்விச் செல்வமே உயர்ந்தது. பிற செல்வங்களும் நமக்குத் தேவையானவையே. இத்தகைய கல்விச் செல்வத்தை இளமையிலேயே பெறுதல் நன்று. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பர். இளமையில் கற்றால் தொடர்ந்து எப்போதும் கற்கலாம். ஆகவே நாங்களும் இளமையிலேயே கல்விச் செல்வத்தைப் பெற்று சிறப்புடன் வாழ்வோம்.

1. சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெறுபவர் யார்?

______________________________

______________________________

2. கேடில் விழுச் செல்வம் கல்வி என்றவர் யார்?

______________________________

______________________________

3. ஒருவர் எப்போது கல்வியைப் பெற்றுக் கொள்வது சிறந்தது?

______________________________

______________________________

4. இங்கே வந்துள்ள பழமொழி ஒன்று கூறுக.

______________________________

______________________________

5. அழிவில்லாத செல்வம் எது?

______________________________

______________________________

புள்ளிகள் 10)

3) தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஏழுவகை ஒலிகளையும் குறிப்பதற்கு நம் முன்னோர் பயன்படுத்திய எழுத்துகள் எவை?

2. கண்டிச் சிறையிலிருந்து தப்பிச் சென்ற ஐரோப்பியனது பெயர் என்ன?

3. பூநகரிப் பகுதி அகழ்வாய்வில் எந்தெந்த நாட்டு நாணயங்கள் காணப்பட்டன?

4. போர்க்களத்தில் கொட்டும் முரசின் பெயர் என்ன?

5. இலக்கிய இன்பம் என்ற பாடத்தில் வயலுக்கு வேலியாக இருப்பவை எவை?

புள்ளிகள் 10)

4) கீழ்வரும் பாடலைப் படித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

வரம்போ தலகாணி செல்லா! உனக்கு
வாய்க்காலோ பஞ்சுமெத்தை
சார் பார்த்து நடந்திடடா செல்லா! நீ
சரிந்து நடந்திடடா
ஓடி நடந்திடடா செல்லா! நீ
உன் உறுதியுள்ள காலாலே
இந்த நடை நடந்து செல்லா! நாம்
எப்ப கரை சேர்வோமடா
வட்டத் தலையரடா செல்லா நீங்க
வாலாட்டும் கொம்பரடா
மாரிமழை பெய்ஞ்சு செல்லா நம்ம
மானாவாரி தான் விளைய
கோடை மழை பெய்ஞ்சு செல்லா - நம்ம
காலபோகம் தான் விளைய

1. இப் பாடலில் வரும் தொழில் எது?

________________________________________

________________________________________

2. வாலாட்டும் கொம்பர் எனக் கூறப்படுபவை எவை?

________________________________________

________________________________________

3. இங்கு கூறப்படும் இரண்டு காலமழை எவை?

________________________________________

________________________________________

4. பஞ்சு மெத்தையாகக் குறிப்பிடப் படுவது எது?

________________________________________

________________________________________

5. இப்பாடல் யாரால், யாருக்குக் கூறப்படுகிறது?

________________________________________

________________________________________

புள்ளிகள் 10)

5) கீழே தரப்பட்டுள்ள இலக்கண மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.

1. தொடர்ச் சொல்லியம் ஒன்று தருக.

2. குளத்தில் பறவைகள் மீன்களைக் கொத்திப் பிடிக்கின்றன. இதில் இடம் பெறும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றைத் தருக.

3. மூன்று கால வினைமுற்றுகளுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

4. தரப்பட்டுள்ள அடுக்குத் தொடர்களின் பொருள் விளங்கக் கருத்துள்ள சொல்லியங்கள் எழுதுக.

சின்னச்சின்ன :

வண்ண வண்ண :

மின்னி மின்னி :

5. தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் தருக.

1. ஒறுப்பு ____________

2. இடுக்கண் ____________

3. திறை ____________

4. கடுகதி ____________

5. அல்லல் ____________

புள்ளிகள் 15)

6) **கீழ்வரும் பந்தியை வாசித்து அதனை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

திருவள்ளுவர் தமிழ்நாட்டில் பிறந்தார். இவர் சிறந்த தமிழ்ப் புலவர். இவர் இயற்றிய நூல் திருக்குறள். இதில் 1330 குறள்கள் அமைந்துள்ளன. இக் குறள்கள் மாந்தன் வாழவேண்டிய நல்வழிகளைக் கூறுகின்றன. உலகில் உள்ள எல்லா இன மக்களுக்கும் பயன்படத்தக்க ஒரு நூலாக இது இருக்கிறது. இதனால் இத்திருக்குறள் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. குறளைக் கற்போம். அதன்படி நடப்போம்.

புள்ளிகள் 05)

7) **கீழ்வரும் விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.**

1. எனது தாயகம்.

2. மருதுபாண்டியன்.

3. வீரஞ்செறிந்த வன்னியும் தமிழரசுகளும்.

புள்ளிகள் 20)